

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் வழங்கினார். நீலகிரி மாவட்டம், உதகை பிங்கர்போஸ்ட் ஆர்.சி.காலனி இளைஞர்கள் நடத்தும் கால்பந்து ஆட்டத்திற்கான பரிசு கோப்பை பெறுவதற்கான தொகை ரூ.12000 திற்கான காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை பொதுக்குழு தொரை உட்பட கழக நிர்வாகிகள் பலர் மற்றும் போட்டி நடத்தும் இளைஞர்கள் உள்ளனர்.

### பெங்களூரு கட்டட விபத்தில் உயிரிழந்த

# தமிழ்நாட்டைச் சேர்ந்த 2 பேருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.26 -**

**கர்நாடக மாநிலம், பெங்களூரு, ஹென்னூரில் பெய்த கனமழையின் காரணமாக கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்த தமிழர்கள் இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கர்நாடக மாநிலம், பெங்களூரு, ஹென்னூரில் கடந்த 22.10.2024 அன்று பிற்பகலில் பெய்த கனமழையின் காரணமாக கட்டுமானப்பணி நடந்து கொண்டிருந்த கட்டடம் எதிர் பாராத விதமாக இடிந்து விழுந்த விபத்தில் 8 நபர்கள் உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் தமிழ்நாட்டிலிருந்து கட்டுமானப் பணிக்காக சென்றிருந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணி கண்டன் மற்றும் சத்தியராஜ் ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மணிகண்டன் மற்றும் சத்தியராஜ் ஆகியோரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### இந்திய ரூபாயின் மதிப்பு – வரலாறு காணா கடும் வீழ்ச்சி!


# மோடி ஆட்சியின் - ‘மோடினாமிக்ஸ்’ புனைவின் சாட்சி!

## ‘தீக்கதிர்’ தலையங்கம் காட்டம் !

சென்னை, அக்.26-

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.84.7 ஆக வரலாறு காணா வீழ்ச்சியின் மூலம் மோடி ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம் எந்தத் திசை நோக்கிச் செல்கிறது என்பதற்கான ‘மோடினாமிக்ஸ்’ புனைவின் சாட்சியாக இருக் கிறது என ‘தீக்கதிர்’ (25.10.2024) தலையங்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-



தீக்கதிர்

2024 அக்.25 வெள்ளிக்கிழமை

வீழ்ச்சியே சாட்சி!

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.84.7 ஆக வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்திருக்கிறது இது மோடி ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம் எந்த திசையை நோக்கிச் செல்கிறது என்பதற்கான சாட்சியாகவும் இருக்கிறது.

2024- 2025 நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 7 சதவிகிதமாக இருக்கிறது. இது விரைவில் 8 சதவிகிதத்தைத் தொடும் என இந்திய ரிசர்வ் வங்கி கூறுகிறது இது உண்மையெனில் ஏன் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து அதலபாதாளத்திற்கு செல்கிறது? இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் உண்மையான பொருளாதார தரவுகளின் அடிப்படையில் கணக்கிடுகிறதா; அல்லது "மோடினாமிக்ஸ்" புனைவுகளை புள்ளிவிவரங்களாக மாற்றுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.84.7 ஆக வரலாறு காணாத வகையில் வீழ்ச்சி யடைந்திருக்கிறது. இது மோடி ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம் எந்த திசையை நோக்கிச் செல்கிறது என்பதற்கான சாட்சியாகவும் இருக்கிறது.

2024- 2025 நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 7 சதவிகிதமாக இருக்கிறது, இது விரைவில் 8 சதவிகிதத்தைத் தொடும் என இந்திய ரிசர்வ் வங்கி கூறுகிறது. இது உண்மையெனில் ஏன் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி யடைந்து அதலபாதாளத் திற்குச் செல்கிறது? இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் உண்மையான பொருளாதார தரவுகளின் அடிப்படையில் கணக்கிடுகிறதா; அல்லது “மோடினாமிக்ஸ்” புனைவுகளை புள்ளிவிவரங்களாக மாற்றுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி யடையும் போது அது பொருளாதாரத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுதான் எதார்த்தம். குறிப்பாக மருந்துகள், தங்கம், பிளாஸ்டிக் பொருட்கள், ரசாயனங்கள், எலக்ட்ரானிக் பொருட்கள், பெட்ரோல், டீசல், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவை ரூபாய் மதிப்புடன் நேரடித் தொடர்புடையவை. எவ்வளவிற்கு எவ்வளவு ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைகிறதோ, அதே வேகத்தில் பொருட்களின் விலையும் பன்மடங்கு உயரும்.

காரணம், இந்தியாவில் ஏற்றுமதி செய்வதை விட இறக்குமதியின் அளவு அதிகமாக இருக்கிறது. அதாவது வர்த்தகப்பற்றாக்குறை ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடியாக (20.78 பில்லியன் டாலர்) இருக்கிறது. மறுபுறம் வழக்கத்திற்கு மாறாக இந்த மாதத்தில் மட்டும் 10 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகள் இந்தியச் சந்தையிலிருந்து வெளியேறியிருக்கிறது. அதாவது வழக்கமாக அக்டோபர் மாதம் பண்டிகை காலம் என்பதால் வர்த்தகம் அதிகரிக்கும். முதலீடு களும் அதிகரிக்கும். ஆனால் தற்போது, இருக்கும் முதலீடும் வெளியேறியிருக்கிறது.

இந்த லட்சணத்தில் எப்படி ஜிடிபி வளர்ச்சி 8 சதவிகிதத்தை எட்ட முடியும் ? பொதுவாக சர்வதேச அளவில் போர் அல்லது மிகப் பெரிய இடர்பாடு ஏற்பட்டால் கச்சா எண்ணெய் விலை அதிகரிக்கும். ஆனால் உக்ரைன் ரஷ்யா, லெபனான் இஸ்ரேல் மோதல் பின்னணியில் ஒபெக் பிளஸ் நாடுகள் உற்பத்தியைக் குறைத்து செயற்கையாகப் பற்றாக்குறையை உருவாக்கிய போதும் கச்சா எண்ணெய் விலை பெரிய அளவில் உயரவில்லை. கடந்தாண்டு ஏப்ரலில் ஒரு பேரல் கச்சா எண்ணெய் 89 டாலராக இருந்தது. ஆனால் இந்த அக்டோபரில் அது 76 டாலராகவே இருக்கிறது.

அப்படியிருந்தும் டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ஏன் கடும் வீழ்ச்சியடைய வேண் டும்? உண்மையில் இந்தியப் பொருளாதாரம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறது என்பதன் எச்சரிக்கையே ரூபாய் மதிப்பின் வீழ்ச்சி. அதனை மறைக்க மீண்டும் வட்டி விகிதத்தை உயர்த்துவது, பொருட்களின் விலையை உயர்த்துவது என மக்களின் தலையில்தான் மேலும் சுமை ஏற்றப்படும். கூடிய விரைவில் ‘வளர்ச்சி முகமூடி’ கிழிந்து உண்மை வெளிவரும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அண்ணல் தங்கோ

### அக்டோபர் 26 (2015)



**இளம்வயதிலேயே திராவிடர் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சைதை பகுதியில் வட்டச் செயலாளர் பொறுப்பேற்று அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஆளுநர் ஆர்.என்.ரவி - தமிழ்நாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்!

தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்றாண்டு காலம் தனிப் பெரும்பான்மையுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமின்றி இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் அளப்பரிய சாதனைகளை “திராவிட மாடல்” ஆட்சிமுறையின் மூலம் நிகழ்த்தியிருக்கிறது என்பதையும், தொடர்ந்து தொய்வின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் ஆட்சியின் சட்டப் பாதுகாப்பும், திட்டத்தின் பயனும் அனைத்து மக்களுக்கும் சென்றடைந்து கொண்டிருக்கிறது என்பதையும் யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ இயலாது. திராவிட மாடல் ஆட்சியினால் பயனடைந்த தமிழ்நாட்டு மக்கள், உள்ளாட்சித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வியத்தகு வெற்றியினை ஆட்சியின் சாதனைகளுக்குப் பரிசாக வழங்கி, திராவிட மாடல் ஆட்சி என்பது மக்களால், உருவாக்கப்பட்ட மக்களுக்கான, மக்களுடைய ஆட்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

பல துறைகளில், தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதை ஒன்றிய அரசே ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சிக்கு எதிராகவும், இந்திய அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாகவும், தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆளுநர் பொறுப்பு என்பது நியமனப் பொறுப்புதான். (Appointed by the President of India) இந்திய குடியரசுத் தலைவர் தான் ஆளுநரை நியமிக்கிறார். ஆம்! இந்திய ஒன்றிய அரசுப் பிரதமரின் ஆலோசனைகளைப் பெற்று நியமிக்கிறார். மாநில ஆளுநர்களுக்கான அதிகாரம் இந்திய அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், அந்த வரையறுக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில், ஆளுநர் தான்பொறுப்பேற்றுக்கொண்ட மாநில வளர்ச்சிக்கும், மக்களின் நலனுக்குமான பணிகளை நிறைவேற்றிட தன்ஆற்றல் முழுமையும் பயன்படுத்துவேன் என்று இந்திய அரசியல் சட்டம் பிரிவு 159 இன் படி உறுதிமொழி எடுத்துள்ளார். (Article 159 of Indian Constitution) பொதுவாக உறுதிமொழியெடுப்பதற்கான நோக்கமே, அந்த உறுதிமொழியின் மூலம் உறுதிசெய்யப்பட்ட வாக்குறுதிகளை மீறக் கூடாது என்பது மட்டுமல்ல மீறினால், தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை இழந்தவராகத்தான் கருதப்பட வேண்டும். ஆனால், தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி பலமுறை தான் இந்திய அரசியல் சட்டப்படி எடுத்துக்கொண்ட உறுதிமொழியை மீறிச் செயல்பட்டுள்ளார் என்பதற்கான சான்றுகளும், நிகழ்வுகளும் பல உண்டு. இது தொடர்பாக அச்சு ஊடகங்களும், மின் ஊடகங்களும், பலமுறை நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளன. தமிழ்நாடு அரசின் சார்பாகவும் ஆளுநர் பற்றிய புகார்கள் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆளுநராக நீடிப்பதற்கான திரை மறைவு உண்மைகள் என்ன என்பதை அவரை நியமித்த குடியரசுத் தலைவரும், அதற்கு காரணமான ஒன்றிய நிர்வாக அமைப்பும் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல இந்த சூழ்நிலையில் அவர் தொடர்ந்து தமிழ்நாடு ஆளுநராக நீடிப்பதற்கு உள்நோக்கம் இருப்பதாகவே கருதமுடிகிறது.

மாநிலத்தின் ஆளுநர் பிரதம அமைச்சரின் பரிந்துரையுடன் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டிருந்தாலும், ஆளுநர் ஒன்றிய அரசின் ஆட்சிக்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதிநிதியாகச் செயல்பட முடியாது. மாநிலத்தின் ஆளுநர் இந்திய அரசியல் சட்டப் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களின் அடிப்படையில்தான் செயல்பட முடியும். மாறாக அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரங்களை எதிர்த்தும், மீறியும் செயல்பட்டால், ஆளுநர் தன் பொறுப்பை இழந்தவராகத்தான் கருதமுடியும்! ஆனால், இந்த அடிப்படையில் அவரை பொறுப்பிலிருந்து அப்புறப்படுத்தி அறிக்கை கொடுக்கக் கூடிய அதிகாரம் குடியரசுத் தலைவரிடம்தான் உள்ளது.

குடியரசுத் தலைவர் ஏன் தமிழ்நாடு ஆளுநரை தமிழ்நாட்டின் ஆளுநர் பொறுப்பிலலிருந்து நீக்கிடவில்லை என்பதற்கான காரணங்கள் அரசியல் அடிப்படையிலான தடைகளாகத்தான் இருக்கும் முடியும், வேறு நியாயமான காரணங்கள் இருப்பதற்கான வாய்ப்போ, சூழ்நிலையோ இல்லையென உறுதியாகக் கருதலாம். இந்த அசாதாரண சூழ்நிலைகளை, தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஆளுநர் ரவி தன்னுடைய அரசியல் சட்டவிரோத நடவடிக்கைகளை விரிவுபடுத்திக் கொண்டுவருகிறார். சமீபத்தில் சென்னையில் 18.10.2024ம் நாள் நடைபெற்ற தூர்தர்ஷன் இந்தி மாத நிறைவு விழா நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என். ரவி தலைமை விருந்தினராகக் கலந்து கொள்கிறார். அந்த நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்தில் “தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்” என்ற சொற்றொடரை புறக்கணித்து பாடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு தமிழ்நாட்டில் மிகப்பெரிய எதிர்ப்பு அதிர்வலைகளை உருவாக்கியது. இந்த சூழ்நிலை யில்தான் முதல்வர் அவர்கள் மிகச்சரியாக இந்த நிகழ்வு குறித்த கண்டனத்தை தெரிவிக்கும் பொழுது ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாட்டின் ஆளுநரா? அல்லது ஆரியனாக ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் பிரதிநிதியாகச் செயல்படுகிறாரா? என்ற கேள்வியினை எழுப்பி, தன்னுடைய கண்டனத்தை தமிழ்நாட்டு மக்கள் சார்பாகத் தெரிவித்தார்.

ஆளுநர் கலந்து கொண்ட தூர்தர்ஷன் நிகழ்ச்சியில் நிறைவாக தேசிய கீதம் பாடும் பொழுது “திராவிடம்” என்ற சொற்றொடர் உச்சரிக்கப்படவில்லையென இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில ஏடு தெரிவித்திருக்கிறது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்திலும், இறுதியில் பாடிய தேசிய கீதத்திலும் “திராவிடம்” என்ற சொல் உச்சரிக்கப்படாத நிகழ்வு இயல்பாக ஏற்பட்டுவிட்டத் தவறு என்று ஏற்றுக் கொள்ளவியலாது. நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் இந்திய ஒன்றிய அரசால் நிர்மாணிக்கப்பட்ட செய்தி நிறுவனமாகும். அதில் நடைபெற்ற விழா இந்தி மாத நிறைவு விழா. கலந்து கொண்ட முதன்மை விருந்தினர் தமிழ்நாட்டினுடைய ஆளுநர் ஆர்.என். ரவி, இந்தி மொழி வளர்ச்சிக்கான மாதாந்திர நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் ஆளுநர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளும் சூழ்நிலையில், செய்திகளை அன்றாடம் மக்களுக்கு வழங்குகின்ற பணியையும், பக்குவத்தையும், பயிற்சியையும் பெற்ற தூர்தர்ஷன் நிறுவனம், திட்டமிட்டு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் பாடப்படும் தமிழ்த்தாய் வாழ்த்திலும், நிகழ்ச்சியின் இறுதியில் பாடப்படும் தேசிய கீதத்திலும் “திராவிடம்” என்ற சொற்றொடர் மட்டும் தவிர்க்கப்பட்டுள்ள நிகழ்ச்சியை தவறுதலாக ஏற்பட்ட நிகழ்வு என தூர்தர்ஷன் நிறுவனம் மன்னிப்பு கேட்டாலும், மன்னிப்பதற்கான காரணங்கள் எள்ளின் முனையளவு கூட இதில் இல்லையென்பது மட்டு மல்ல, இது திட்டமிட்ட செயல் என்பதற்கான அனைத்து சான்றுகளும், தரவுகளும் உள்ளது என்பதை இந்த நிகழ்வுகளை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும் என்பதை ஐயமில்லை.

மாநிலங்களுக்கான ஆளுநர்கள் நியமனம் குறித்து இந்திய அரசியல் சட்ட நிர்ணயச் சபை விவாதத்தின் பொழுது உரையாற்றிய அரசியல் சட்ட நிர்ணயச் சபை உறுப்பினராக அங்கம் பெற்றிருந்த நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞரும், சட்ட வல்லுநருமான சென்னையை சேர்ந்த அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஆளுநரின் நடவடிக்கைகள் எப்படி அமைந்திட வேண்டுமென தன்னுடைய கருத்தை முன்வைக்கும் பொழுது “ஆளுநர் அரசியல் சட்டப்படி, அந்த மாநிலத்தின் முதன்மையானவர் மட்டுமல்லாமல், மாநிலத்தின் பிரச்சனைகளைத் தெளிவாகவும், கூர்மையாகவும் ஆய்ந்தறிந்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்குபவராகவும், பிரச்சனைகள் என்று மாநிலத்தில் வரும் பொழுது அதனை அமைதிப்படுத்தி, அமைதியான வாழ்வியல் சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஆலோசனைகள் வழங்கக் கூடியவராகவும் இருக்க வேண்டுமென்ற கருத்தை முன்வைக்கிறார். [Reference CONSTITUENT ASSEMBLY DEBATES - BOOK NO.3, Page No. 431, 432 - The central fact to be remembered is that the Governor is to be a constitutional head, a sagacious counselor and adviser to the Ministry, one who can throw oil over troubled waters.]

ஆனால், தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி சட்ட வல்லுனர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு முற்றிலும் முரண்பட்டவராக, ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களை முன்னெடுத்துச் செல்பவராக இருக்கிறாரேயல்லாமல், அவர் தன் நிலை அறிந்து செயல்பட்டவராகத் தெரியவில்லை. திராவிட மாடல் ஆட்சியின் தாக்கத்தால் வளமும், அமைதியும் நிலவிடும் தமிழ்நாட்டில் குழப்பங்களையும், குதர்க்கங்களையும் உருவாக்கும் நாற்றங்காலாக ராஜ்பவனை ஆளுநர் ரவி உருமாற்றம் செய்வாரேயானால் இதற்குத் தீர்வாக ஒன்று, தமிழ்நாடு நலனுக்கு முரண்பட்டுச் செயல்படும் ஆளுநர் ரவி அப்புறப்படுத்தப்பட வேண்டும் அல்லது ஆளுநர் பொறுப்பு என்பது முழுமையாக அரசியல் சட்டப் பிரிவிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் கொள்கையும், கோரிக்கையுமாகும். அதுவே அனைத்து மாநிலங்களுக்கும் நிரந்தரத் தீர்வாக அமையும்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



### கன்னியாகுமரி கிழக்கு - அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# முப்பெரும் விழா - கழக பவள விழா பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ. லியோனி - மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினர்!

கன்னியாகுமரி, அக்.26-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா மற்றும் கழக பவள விழா பொதுக்கூட்டம் 24.10.2024 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொட்டாரம், காந்தி திடலில் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பா.பாபு தலைமையில், பேரூர் கழக செயலாளர்கள் எஸ். வைகுண்டபெருமாள், குமரி ஸ்டீபன், சுதை சுந்தர், புவியூர் காமராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கழக கொள்கை பரப்பு செயலாளரும் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ரா.பார்த்தசாரதி, என். தாமரைபாரதி, நாகர்கோ வில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலை, புதூர் நாடு, புங்கப்பட்டு நாடு, நெல்லி வாசல் நாடு உள்ளிட்ட இடங்களில், சாலைப் பணிகளை சி.என்.அண்ணாதுரை எம்.பி., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர். அங்கன்வாடி மையம், சமுதாயக் கூடம் உள்ளிட்டவைகளும் திறந்து வைக்கப்பட்டன.